# தாத்தாவுடன் ஒருநாள்...



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.WorldTamilAcademy.com

அறிவே வளம்

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்


www.worldtamilacademy.com


விடுமுறைக்கு கிராமத்திற்கு வந்த
மாதவன் தாத்தாவுடன்
வயல்வெளிக்குச் செல்கிறான். தாத்தா
அவனுக்கு ஒவ்வொன்றைப் பற்றியும்
எடுத்துக் கூறுகிறார்.



இதுதான் வாய்க்கால்.
“மீன்கள் துள்ளி விளையாடுகின்றன தாத்தா!”


செடிகளுக்கு வாய்க்கால் வழியாகத்தான் தண்ணீர் செல்லும். இது காளை மாடு. அங்கே பார் அவை நிலத்தில் உழுகின்றன.


அதுதான் சோளக்காட்டு பொம்மை.
“பறவைகள் பயிர்களைக் கொத்தாமல்
இருக்க இது காவல் காக்கும்.”
அது என்ன? பொம்மையா?


இதுதான் கிணறு. இதிலிருந்துதான் வாய்க்கால் வழியாகத் தண்ணீர் பாய்கிறது
ஓ அப்படியா தாத்தா எவ்வளவு ஆழம்! ..



தாத்தா உங்க கையில் இருக்கிறது என்னது?
இது களைவெட்டி. “பயிர்களுக்கு இடையே வளரும் களைகளை நீக்கும் கருவி”.


அதுவா அதுதான்
மல்லிகைப்பூ செடி.
தாத்தா ஒரு வாசனை
எனக்கு வருகிறது.


இல்லை! இது தென்னைமரம்.
கொத்துக் கொத்தாய் இருக்கிறதே
அது தான் இளநீர்.
தாத்தா இது
பனைமரமா?


நான் அதைப் பறித்துத் தருகிறேன். நீ குடிக்கிறயா?
இதன் சுவை அருமை! எனது தண்ணீர் தாகத்தைத் தீர்த்தது.


இப்ப நம்ம வீட்டிற்குப் போகலாமா?
சரி தாத்தா, வாங்க போகலாம். உங்களுடைய காலுக்குக் கீழே ஏதோ போகிறதே!


அதுவா! மண்ணில்
ஊர்ந்து மண்ணையே
உரமாக்கும் நண்பன் –
மண்புழு தான் அது.



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com